Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No.33/2022

| | |
|---|---|
| | Prosecution PW-4 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.திரு.வேலுச்சாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 04.04.2024.

**1,5 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது கரூர் ராமானுஜ நகரில் அமராவதி மருத்துவமனை என்ற பெயரில் தனியார் மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான் பணியில் இருந்தபோது 07.07.2015-ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் கரூர் தோட்டக்குறிச்சி ஆதிதிராவிடர் தெருவைச் சேர்ந்த முனியப்பன் என்பவரின் மனைவி திருமதி.உமாராணி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அதே

தேதியில் மாலை சுமார் 6.30 மணியளவில் அவரும் மற்றொரு நபரும் தோட்டக்குறிச்சியில் உள்ள மல்லாண்டார் கோவில் அருகில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் கடப்பாறையாலும், குழாய் கம்பியாலும், கட்டையாலும், மூங்கில் குச்சியாலும் அடித்ததாகவும், தகாத வார்த்தை பேசியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் ஏற்பட்ட காயம் என்றும் கூறினார்கள். மேற்படி காயங்கள் அவர்கள் சொன்ன ஆயுதத்தால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

2) 07.07.2015 ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் கரூர் புஞ்சைதோட்டக்குறிச்சி ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த மாரியப்பன் என்பவரின் மகன் சிவசுப்பிரமணி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு அதே தேதியில் மாலை 6.30 மணியளவில் அந்த சிவசுப்பிரமணி என்பவரை தோட்டக்குறிச்சியில் உள்ள மல்லாண்டார்கோவில் அருகில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் கடப்பாறையாலும், குழாய் கம்பியாலும், கட்டையாலும், மூங்கில் குச்சியாலும் அடித்ததாகவும், தகாத வார்த்தை பேசியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதில் காயம் ஏற்பட்டதாக கூறினார்கள்.மேற்படி காயங்கள் அவர்கள் சொன்ன ஆயுதத்தால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

சிவசுப்பிரமணியை பரிசோதித்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். கீழ்க்கண்ட காயங்களை பதிவு செய்தேன்.
காயம் எண்.1 - தலைப்பகுதியில் வலது புற பக்கவாட்டில் 2x1 x1 cm அளவில் ஒரு சிதைந்த காயம் இருந்தது.

காயம் எண்.2 வலது புற மார்பு பகுதியில் சிராய்ப்பு காயங்கள் இருந்தன அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து 15.07.2015-ம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவித்தோம். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1 மற்றும் 2 சாதாரண காயங்கள் என காயச்சான்றிதழ் வழங்கினேன். **விபத்து பதிவேடு மற்றும் நான் வழங்கிய காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியிடப்படுகிறது.**
3) உமாராணியை பரிசோதித்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். கீழ்க்கண்ட காயங்களை பதிவு செய்தேன்.
காயம் எண்.1- தலையின் நெற்றி பகுதியில் இடது புறத்தில் வீக்கமும், தொடு வலியும் இருந்தது. (Tenderness)

காயம் எண்.2 - வலது முன் கையில் தொடு வலி இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து மறுநாள் 08.07.2015 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவித்தேன்.

மேலே கண்ட காயங்களான காயம் எண்.1 மற்றும் 2 க்கு சாதாரண காயங்கள் என காயச்சான்றிதழ் வழங்கினேன். **விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியிடப்படுகிறது**.

4) சிவகாமி என்பவரையும் 07.07.2015-ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் கரூர் புஞ்சைதோட்டக்குறிச்சி ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த மாரியப்பன் என்பவரின் மனைவி சிவகாமி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு அதே தேதியில் மாலை 6.30 மணியளவில் இவரும் மற்றொரு நபரும் இருக்கும்போது தோட்டக்குறிச்சியில் உள்ள மல்லாண்டார்கோவில் அருகில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் கடப்பாறையாலும், குழாய் கம்பியாலும், கட்டையாலும், மூங்கில் குச்சியாலும் அடித்ததாகவும், தகாத வார்த்தை பேசியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதில் காயம் ஏற்பட்டதாக கூறினார்கள். மேற்படி காயங்கள் அவர்கள் சொன்ன ஆயுதத்தால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அவரை பரிசோதித்ததில் அவர்சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்களை பதிவு செய்தேன்.

காயம் எண்.1 வலது முன் கையில் தொடு வலி இருந்தது.

காயம் எண்.2 வலது முழங்கால் பகுதியில் 3x2 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. 2X1 cm அளவில் மற்றொரு சிராய்ப்பு காயம் அதே பகுதியில் இருந்தது. மற்றும் ஒரு சிராய்ப்பு காயம் 2x1x1 cm அளவில் இருந்தது வலது முன் கையில் 3x1 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து நுண் கதிர் படம் எடுக்கப்பட்டது. அதில் முன் கையில் 2 எலும்புகள் முறிவு இருந்தது. **நுண் கதிர் படம் அ.சா.ஆ.7 ஆக குறியிடப்படுகிறது.** அந்த நபரை மறுநாள் மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டோம். **நான் வழங்கிய விபத்து**

**பதிவேடு நகல் அ.சா.ஆ.8 ஆக குறியிடப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அமராவதி மருத்துவமனை என்பது என்னுடையது என்றால் சரிதான். எல்லா வைத்தியத்திற்கும் தனித்தனி நிபுணர்கள் உண்டு என்றால் சில வைத்தியத்திற்கு மட்டும் நிபுணர்கள் உண்டு, மற்றபடி வெளியே இருக்கும் நிபுணர்களை அழைத்தால் எங்கள் மருத்துவமனைக்கு வந்து வைத்தியம் பார்ப்பார்கள். ICU பிரிவு உள்ளது என்றால் உள்ளது. எப்போதுமே என்னை தவிர்த்து மேலும் 2,3 பணி மருத்துவர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். பொதுவாக மருத்துவமனைக்கு வரும் நபர்கள் சொல்வதைத்தான் விபத்து பதிவேட்டில்நாங்கள் குறிப்பு எடுப்போம் என்றால் சரிதான்.

2) இந்த வழக்கில் அடிபட்டு மருத்துவமனைக்கு வந்த 3 நபர்களுமே சுயநினைவுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் தான் தங்களுக்கு காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று கூறினார்கள் என்றால் சரிதான். 3 நபர்களும் தன்னிச்சையாகத்தான் வந்து மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் எங்களுடைய ஆவணங்களின்படி சரிதான். விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாகத்தான் மேற்கண்ட 3 நபர்களும் கூறினார்கள் என்றால் சரிதான். அதுபோல் குழாய் கம்பி, மூங்கில் குச்சி, கடப்பாறை, கட்டை ஆகியவற்றால் தாக்கியதாகத்தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

3) சிவசுப்பிரமணியத்திற்கு எக்ஸ்ரே எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அவருக்கு வலது கை மணிக்கட்டிலோ, முதுகிலோ காயம் இருந்ததாக குறிப்புகள் எதுவும் விபத்து பதிவேட்டிலோ, காயச்சான்றிதழிலோ இல்லை என்றால் சரிதான். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டது 07.07.2015 ம் ஆண்டு மாலை 7.30 மணிக்கு என்றால் சரிதான். சிவகாமிக்கு மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் இரத்த காயமாக இருந்ததா என்றால் இரத்த காயம் இல்லை. நான் பரிசோதனை செய்தபோது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாகவே ஏதேனும் சிகிச்சை எடுத்துக் கொண்டார்களா என்றால் இல்லை. சிவகாமி மருத்துவமனையில் 07.07.2015-ம் தேதி இரவு 9 மணிக்கு அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான்.

4) எங்கள் மருத்துவமனையிலிருந்து சிவகாமி விடுவிக்கப்பட்டதற்கு பின்னிட்டு வேறு எந்த மருத்துவமனைக்கு சென்றார்கள் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் மேல் சிகிச்சைக்காக கோவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அ.சா.3 உமாராணியும் இரவு 9 மணிக்குத்தான் எங்களது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும் சாதாரண காயங்கள் என்றால் சரிதான். அவர் மருத்துவமனையிலிருந்து மறுநாளே விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். விசாரணையின்போது ஆயுதங்களை காட்டி விசாரணை செய்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

5) அ.சா.2 சிவகாமிக்கு ஏற்பட்ட எலும்பு முறிவானது வேகமாக இரு சக்கர வாகனத்தில் போகும்போது கீழே விழும்போது கையை தரையில் தாங்கி பிடித்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஏற்படலாம். ஒழுங்கற்ற கட்டை போன்ற ஆயுதத்தால் தாக்கும்போது இரத்த காயம் ஏற்பட்டு பின்புதான் எலும்பு முறிவு ஏற்படும் என்றால் சரிதான். மூன்று நபர்களுக்கும் ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் தள்ளுமுள்ளு ஏற்பட்டு கீழே விழுந்தாலும், இரு சக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha

நீதித்துறை நடுவர் ,கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்.